**செ.வெ. எண்: 428** **நாள்: 20.07.2012**

**<u>மறுப்பு அறிக்கை</u>**

திருவரங்கம் தொகுதியில் பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது. திருச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட மாதாந்திர நுகர்வோர் கூட்டங்களில் நுகர்வோர் அமைப்புகள் அரிசி நன்றாக உள்ளதாக தெரிவித்துள்ளன. மேலும், சிறப்புப் பொதுவிநியோகத்திட்டத்தின்கீழ் திருவரங்கம் தொகுதிக்கு தேவையான அளவு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஜுலை 2012 மாதத்திற்கு தேவையான துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பினை முழுவதுமாக நகர்வு செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 19.7.2012 நாளிட்ட முரசொலி நாளிதழில் "திருவரங்கம் தொகுதியில் ரேஷன் பொருட்கள் சரவர சப்ளை இல்லை" என்று வாசகர் பகுதியில் வெளியிடப்பட்ட பொதுவிநியோகத் திட்டம் குறித்த செய்தி யாவும் உண்மைக்குப் புறனானது.

எம்.பி. நிர்மலா,
அரசுச் செயலாளர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**